பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 16] சென்னை: ஆவணி 2 (17—8—68) சனி ★ வெளியூர்: ஆவணி 3 (18—8—68) ஞாயிறு [இதழ்: 54

'தேசியம்' என்றால் பொருள் என்ன?

சென்னை, ஆக. 17—

"தேசியம் என்றால் கதர் அணிவது -- காந்தி சிலைக்கு மாலை போடுவது -- எதிர்க் கட்சியினரை முறைத்துப் பார்ப்பது என்று பொருள் அல்ல!

"நாட்டின்மீது பற்றும், அது முன்னேற வேண்டும் என்ற ஆர்வமும் அதற்காக உழைக்கும் பொறுப்புணர்ச்சியும்தான் தேசியம்!"

-- அறிஞர் அண்ணா

(விடுதலை நாள் விழாக் கூட்டத்தில்

அரசு வருவாய் பெருக வழியில்லை-- செலவுகளோ கூடிவிட்டன!

நிதி ஆணைக் குழுதான் நீதி வழங்க வேண்டும்

சட்டமன்றத்தில் அண்ணாவின் துணை மதிப்பீட்டு உரை

சென்னை, ஆக. 17—

"நடப்பு ஆண்டில் ஜூன் முதல் நாளிலிருந்து அகவிலைப் படி வீதங்களை உயர்த்தி ஒப்பளிப்பு வழங்கியிருப்பதுவே, தற்போதைய துணை மதிப்பீடுகளில் எதிரொலிக்கின்ற மிகப் பெரிய கூடுதல் செலவினப் பொறுப்பாகும்.

"இந்த உயர்வு காரணமாக, நமது பணியாளர்களுக்குரிய அகவிலைப் படிவீதங்கள், அதே தரங்களில் உள்ள மத்திய அரசுப் பணியாளர்களின் அகவிலைப் படிவீதங்களை ஒத்திருக்கின்றன.

"வழக்கம்போல் இந்த அகவிலைப் படி வீத உயர்வு உள்ளூராட்சிப் பணியாளர்க்கும், மானியம் பெறும் பள்ளி ஆசிரியர்கட்கும் பொருந்தும்.

"இதன் காரணமாக ஏற்படும் கூடுதல் செலவினம், ஆண்டொன்றுக்கு 3 கோடியே 60 இலட்சம் ரூபாயென மதிப்பிடப்படுகின்றது; நடப்பு ஆண்டில் ஆகும் கூடுதல் நிகரச் செலவு 2 கோடியே 70 இலட்சம் ரூபாயாகும்; இதற்கென, வெவ்வேறு மானியங்களின்கீழ் எதிர்பார்க்கப்படும் அளவிற்குக் கூடுதல் நிதி ஒதுக்கம் வேண்டப்பட்டுள்ளது.

"ஐந்தாம் நிதி ஆணைக் குழு நமது மாநிலத்தின் நிதித் தேவைகளைப் பற்றி முடிவு செய்கையில், இன்றியமையாத இச்செலவுப் பொறுப்பினைக் கருத்தில்கொண்டு செப்டம்பர் திங்களில் வெளியிடுமென எதிர்பார்க்கப்படுகின்ற அதன் இடைக்கால அறிக்கையில் நமது மாநிலத்திற்குப் போதிய நிதி வசதி கிட்டுவதற்கு வகை செய்யுமென நாம் எதிர்பார்க்கின்றோம்."

இவ்வாறு அண்ணா அவர்கள், சட்டமன்றத்தில், 1968-69-ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளை அளித்துப் பேசுகையில் விளக்கிக் கூறினர்.

சிறப்பு வளர்ச்சித் திட்டங்கள்

தென் ஆற்காடு, செங்கற்பட்டு மாவட்டங்களுக்கெனச் சிறப்பு வளர்ச்சித் திட்டங்களையும் நாம் மேற்கொண்டிருப்பதால் நிதி ஒதுக்கம் வேண்டப்படுகிறது.

இத்திட்டங்களுக்கான மொத்த முதலீடு 2 கோடி ரூபாய்க்கு மேல் ஆகுமென மதிப்பிடப்படுகிறது.

இத்திட்டங்களின்படி, தென் ஆர்க்காடு மாவட்டத்தில் 2,000 தனியார் குழாய்க் கிணறுகளும், 1,000 வடிமுனைக் குழாய்க் கிணறுகளும், செங்கற்பட்டு மாவட்டத்தில 2,000 தனியார் குழாய்க் கிணறுகளும் மூன்றாண்டுக கால அளவில் தோண்டப்படும்.

புதிய பெரும் பாசனத் திட்டங்களுக்கான வாய்ப்புக்கள் நமது மாநிலத்தில் குறைவாதலின், நிலத்திற்கடியிலுள்ள நீர்வளத்தை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்வதற்கான இவ்வகைத் திட்டங்களையே நாம் இயல்பாக நம்பியிருக்க வேண்டியுள்ளது.

பெரும் பாசனத் திட்டங்களும் தேவையே!

சிறு பாசன வாயில்களை முழுமையாகப் பயன்படுத்துவதற்குச் சிறப்பிடம் அளிப்பது சரியே என்றாலும், அதே நேரத்தில் பெரும் பாசனத் திட்டங்களைத் தக்கவாறு பேணி வருவதும் முக்கியம் என்பதை நாம் மறந்து விடுவதற்கில்லை.

தஞ்சைக் கழிமுகப் பகுதியில் புதிய பயிர்முறை செயல்படுத்தப்படுவதிலிருந்து கிடைத்துள்ள அனுபவத்தையொட்டி, இப்புதிய பயிர் முறை உறுதியாக வெற்றியளிக்கும் பொருட்டு, அரசு கல்லணைக்கும் --- காவிரிப் பாசன ஏற்பாடுகளுக்கும் 66 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் மேம்பாடுகள் செய்வதற்கு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது!

உரம் வாங்கக் கடன்

உர வகைகளை வாங்குவதற்கென உழவர்களுக்குக் கடன்கள் வழங்குவதற்கு ரூ. 50 இலட்சம் கூடுதல் நிதி ஒதுக்கம் செய்துள்ளதையும் இம்மன்றத்தினர் வரவேற்பார்கள் என உறுதியாக நம்புகின்றேன்.

சென்னை எண்ணெய்த் தூய்மைத் தொழிற்சாலைக்காக ஏறத்தாழ ரூ. 88 இலட்சம் செலவில் நிறைவேற்றப்பட்டுவருகிற நீர்வழங்குத் திட்டம் விரைவாக நிறைவேறி வருகின்றது.

உரத் தொழிலுக்குத் தண்ணீர்

மணலியில் நிறுவப்பட்டுவரும் சென்னை உரத்தொழிற்சாலைக்கு அன்றாடம் 60 இலட்சம் காலன் தண்ணீர் வழங்குவதற்காக ஒரு கோடியே 82 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் ஒரு திட்டத்திற்கு இப்போது ஒப்பளிப்பு வழங்கியுள்ளோம்.

இலங்கை அகதிகள் இன்பமாய் வாழ....

இலங்கையிலிருந்து விரைவில் ஏராளமான அகதிகள் தாயகம் திரும்பவிருக்கின்றனர். தங்கள் திறனுக்கேற்ற தொழில்களை அவர்கள் மேற்கொள்வதற்கு இயலும் வகையில் அவர்களுக்குக் கடன்கள் வழங்குவதற்கான திட்டமொன்றைத் தீட்டியுள்ளோம்!

முக்கியமான இப்பணி ஒப்படைக்கப்பட்டுள்ள நிர்வாகப் பணியாளர்களின் எண்ணிக்கையை உயர்த்தவும், நடைமுறைகளைச் செம்மைப்படுத்தவும் நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளோம்.

பள்ளிகள் செலவில் பங்கு

சென்னை மாநகராட்சியின் ஆளுகையிலும் ஏனைய நகராட்சிகளின் ஆளுகையிலும் இயங்கிவருகிற உயர்நிலைப் பள்ளிகள் மீதான செலவினம் குறித்து அவைகட்கு இதுவரை ஏற்பட்ட நிகரப் பற்றுக்குறைத் தொகையில 50 சதவீதம மட்டுமே ஈடு செய்து வந்ததற்கு மாறாக, மாநில அரசு இப்போது அத்தொகையில 66⅔ சதவீதத்தை ஈடு செய்யக் கருதுகிறது.

மற்றும், தனியார் பொறியியற் கல்லூரிகளிலும், பல தொழிற் பள்ளிகளிலும துண்டு விழும் தொகைகளை அரசு பெருமளவில் ஈடு செய்ய வேண்டியிருக்கிறது.

1967—68 முதல் இது குறித்த மாநில அரசின் பங்கு 66 சதவீதத்திலிருந்து 75 சதவீதத்திற்கு உயர்த்தப்பட்டுள்ளது.

படக் கலை பாங்குற...

உயரிய கலைத் திறனும், தொழில் நுட்பத் தரமும் வாய்ந்த தமிழ்ப் படங்களைத் தயாரிப்பதற்கு ஊக்கமளிக்கும் வகையில், முழு நீளத் தமிழ்த் திரைப் படங்களுக்கு ஆண்டுதோறும் பரிசுகள் வழங்கும் திட்டமொன்றைச் செயல்படுத்த அரசு கருதுகிறது.

1967-ம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட திரைப் படங்களுக்கு நடப்பு ஆண்டில் ஒரு இலட்சத்து 10 ஆயிரம் ரூபாய் அளவிற்குச் சிறு சேமிப்புப் பத்திரங்கள் வடிவில் பரிசுகள் அளிக்கப்படும்.

நமது மாநிலத்தில் நடைபெறும் முக்கிய நிகழ்ச்சிகளைச் சித்தரிக்கின்ற செய்திக் கதிர் ஒன்றைத் திங்கள்தோறும் தயாரிப்பதற்கான திட்டமொன்றையும் அரசு தொடங்கியுள்ளது."

உடையார்பாளையம் துப்பாக்கிச் சூடு சம்பவம்

எதிர்க் கட்சியினர் கோரிக்கை-- முதலமைச்சர் அண்ணா பதில்

உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு அரசின் சார்பில் ஆழ்ந்த ஆறுதல்

சென்னை, ஆக. 16—

"உடையார்பாளையத்தில் துப்பாக்கிச் சூடு நடைபெற நேரிட்டது வருந்தத்தக்கது; இந்தச் சம்பவத்தில் உயிர் இழந்தவர்களின் குடும்பங்களுக்கு என் சார்பிலும், அரசின் சார்பிலும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"நீதி விசாரணைக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது; அந்த விசாரணை முடிந்த பிறகு முழு விவரமும், முழுத் தகவலும் கிடைக்கும்; இப்போது அது பற்றி விவாதிப்பது தேவையற்றது."

இவ்வாறு முதலமைச்சர் அண்ணா அவர்கள், சட்டமன்றத்தில், 'உடையார்பாளையம் துப்பாக்கிச் சூடு சம்பவம் குறித்து விவாதிக்க வேண்டும்' என்று எதிர்க் கட்சித் தலைவரும்—மற்றும் சிலரும் கொண்டுவந்த அவசரத் தீர்மானம் பற்றிக் கூறுகையில் கருத்தறிவித்தார்.

கே. விநாயகம்:—"நீதி விசாரணையின் முடிவு வருவதற்கு முன்னதாக உடையார்பாளையம் துப்பாக்கிச் சூட்டில் இறந்தவர்களுடைய குடும்பங்களுக்கு உடனே நிதி உதவி செய்ய அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?"

அண்ணா:—"விநாயகத்தின் கருத்தை வரவேற்கிறேன். எங்கள அரசு ஏற்பட்ட பிறகு, இப்போது மிக உருக்கமாகச் சொல்லுவதைப் போல முன்பும் (காங்கிரசு ஆட்சியின்போதும்) அவர் சொல்லியிருக்கலாம்; ஆனால், 'சொல்லக்கூடிய இடத்தில் சொன்னால்தான் செல்லுபடியாகும்' என்று இப்போது எங்களிடம் இந்தக் கோரிக்கையை விடுபவர், முன்பு காங்கிரசு ஆட்சியில் இதைச் சொல்லவில்லை என்று நினைக்கிறேன். நிதி உதவி கோரிக்கையில், இந்த அரசுக்கு முழுமையான--உருக்கமான அனுதாபம் உண்டு."

அந்நியக் கடன் பளு மேலும் உயருகிறது!

புதுடில்லி, ஆக. 16—

1968 ஏப்ரல்—ஜூன் காலத்தில், மொத்தம் ரூ. 252.84 கோடிக்குக கடன் உதவி பற்றிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின.

1968-ம் ஆண்டில் முதல் மூன்று மாதங்களில் ரூ. 17.67 கோடி கடன் உதவிக்கு வகை செய்யும் புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின.

இவற்றையும், சேர்த்து இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்காக வெளிநாட்டு அரசாங்கங்களும், நிறுவனங்களும் 1047 கோடியே 50 இலட்சத்து ஐயாயிரம் டாலர் வழங்கியிருக்கின்றன. அமெரிக்கத் தானிய உதவி -- அனைத்து நாட்டுச் செலாவணி நிதியிலிருந்து கிடைத்த உதவி ஆகியவை இதில் அடங்கா.

தமிழகத்தில் பண்ணைச் சிறைகள்

தமிழக அரசு பரிசீலனை

சென்னை, ஆக. 16—

"தமிழகத்தில் பண்ணைச் சிறைகள் ஏற்படுத்தும் யோசனை அரசின் பரிசீலனையில் இருக்கிறது; விவரங்கள் இன்னும் முடிவாகவில்லை"

என்று சட்டமன்றத்தில், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில சட்ட அமைச்சர் செ. மாதவன் தெரிவித்தார்.

"வடக்கு மாநிலங்களில், பண்ணைச் சிறைகள் நல்ல முறையில் செயல்பட்டுவருவதாகத் தெரிகிறது. நமது சில அதிகாரிகள் அவற்றைச் சென்று ஆராய்ந்து வந்துள்ளனர்"

என்று துணைக் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் கூறினார்.

"கைதிகளுக்கு விவசாயப் பண்ணை வீடுகள் அமைத்துத் தருவது திட்டம்; அதை ஒவ்வொரு சிறையிலும் அமுலுக்குக் கொண்டுவர உத்தேசிக்கப்படுகிறது. இத்திட்டத்தால் அந்தந்தச் சிறைக்குத் தேவையான உணவுப் பொருள்களை உற்பத்தி செய்ய முடியுமென நம்பப்படுகிறது"

என்று அமைச்சர், மற்றொரு துணைக் கேள்விக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

நம்நாடு

: இரா. செழியன்

திருவள்ளுவராண்டு 1999 ஆவணி 2 (17—8—68) சனி

அரியதோர் வாய்ப்பை இந்திய அரசு இழந்தது!

★

இந்திய ஒருமைப்பாட்டைக் குறித்துப் பேசாத நாளில்லை -- பேசாதவர்கள் இல்லை !

இந்திய ஒருமைப்பாட்டைக் குறித்து நாள் தவருமல் பேசிவருகின்றவர்கள் அனைவரிலும், காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்தவர்கள் தான் முன்னணியில் உள்ளனர்.

இந்திய ஒருமைப்பாட்டை உருவாக்குவதில் மற்றவர்களுக்கு இல்லாத அளவுக்குத் தங்களுக்கு மட்டுந்தான் மிகுதியான உரிமையும் அக்கறையும் கவலையும இருப்பதாக முடிவு கட்டி, பேசியும் வருகின்றனர் -- காங்கிரசுக் கட்சியினர் !

இந்திய ஒருமைப்பாட்டை உருவாக்குவதில் மற்ற அரசியல் கட்சியினருக்குத் துளியும் கவலை கிடையாது என்றும், அதுபற்றி மற்ற அரசியல் கட்சியினர் வெளிப்படையாகப் பேசிவருவதில் உண்மை இல்லை என்றும் தங்களுக்குத் தாங்களே தீர்மானித்துக் கொண்டிருப்பவர்கள் காங்கிரசுக் கட்சியினர் ; எனருலும், அது நூற்றுக்கு நூறு உண்மையேயாகும்.

இபபடி இந்திய ஒருமைப்பாட்டை உருவாக்குவதில், மற்ற அரசியல் கட்சிகள் காட்டிவருகின்ற கவலையையும் அக்கறையையும் உண்மையற்றது என்றும், நம்பத்தகாதது எனறும், இத்துறையில் தங்களுக்கு இருந்திடக்கூடிய கவலையும் அக்கறையும் மட்டுந்தான் உண்மையானது -- உறுதியானது என்றும் முடிவுகட்டிக்கொண்டிருக்கின்ற காங்கிரசுக் கட்சியினர், இந்திய ஒருமைப்பாட்டை சிறந்த அடிப்படையின்மீது உருவாக்க இதுவரையில் மேற்கொண்டிருக்கின்ற முயற்சி என்ன ? அம்முயற்சியில் அவர்கள் பெற்றுள்ள வெற்றி என்ன ?

மேற்கொள்ளத்தக்க பணிகள் எதுவும் கிடைக்கப்பெருத நேரத்தில் -- ஏதாவது ஒரு பணியைத் தேடி ஏமாற்றம் அடைகின்ற நேரத்தில் -- இந்திய ஒருமைப்பாட்டை உருவாக்குவது எப்படி என ஆராயும் பணியைத் தேடிப் பெறுவது என்ற முறையில் காங்கிரசுக் கட்சியினரும், அக்கட்சியினரைக் கொண்டு இயங்கும் இந்திய அரசினரும் செயல்பட்டுவருகின்றனர்.

மாநாடுகளைக் கூட்டுவது -- அரசியல் துறையிலும் வேறு துறைகளிலும் உள்ளவர்களைக் கொண்ட மாநாடு கூட்டுவது -- இரண்டு மூன்று நாட்களுக்கு அம்மாநாட்டில் ஒருமைப்பாட்டை உருவாக்கும் வழிவகை குறித்து உரையாடுவது -- இறுதியில், செயலாற்ற நினைத்தலே கூடாது என்ற உறுதியான முடிவுடன் சில செயல் குறிப்புக்களை வரையறுத்துக்கொள்ளுவது -- அச்செயல் குறிப்புக்களை அரசாங்க வெளியீடாக அச்சடித்து, அதே பொருள் குறித்து எற்கனவே அச்சடிக்கப்பட்ட வெளியீட்டுகளுடன் இப்புதிய வெளியீட்டையும் ஒருங்கிணைத்துக் கண்ணுக்கு விருந்தாக அழகுபட அடுக்கி வைத்துக்கொள்ளுவது -- என்ற அளவுடன், இந்திய அரசு முன்னின்று மேற்கொள்ளக்கூடிய ஒருமைப்பாட்டு முயற்சி முற்றுப் பெற்றுவிடுகிறது.

இதைத்தான்---இந்த ஒன்றைத்தான் இந்திய அரசும், அந்த அரசில இடம்பெற்றுள்ள காங்கிரசுக் கட்சியும், இந்திய ஒருமைப்பாட்டை உருவாக்கும் பணியாகத் தொடர்ந்து செய்துகொண்டு வருகிறன்றன.

இந்திய ஒருமைட்பாட்டை உருவாக்கக் காங்கிரசுக் கட்சியும் அக்கட்சி இடம் பெற்றிருக்கின்ற இந்திய அரசும் விரும்புவது உண்மையாக இருக்கும்பட்சத்தில், அதைத் தெள்ளத் தெளிய மக்களுக்கு உணர்த்தக்கூடிய அரிய வாய்ப்பு இந்திய அரசுக்கும், காங்கிரசுக் கட்சிக்கும் அண்மையில் கிடைத்திருக்கிறது. அந்த அரிய வாய்ப்பைக் காங்கிரசுக் கட்சியும் -- இந்திய அரசும் பயன்படுத்திக்கொண்டு, இந்திய ஒருமைப்பாட்டை உருவாக்குவதில் தங்களுக்குள்ள அக்கறையையும் கவலையையும், மக்கள் முன்னல் உறுதி செய்துகொண்டிருக்கலாம் ; ஆனல் காங்கிரசுக் கட்சியும் இந்திய அரசும், கிடைத்ததற்கரிய அவ்வரிய வாய்ப்பை, வேண்டுமென்றே திட்டமிட்டு உதைத்துத் தள்ளிவிட்டிருக்கின்றன.

இந்திய ஒருமைப்பாட்டை சிறந்த அடிப்படையின்மீது அமைப்பதற்கு ஏற்ற முதற்படியாக, நாடாளுமன்றத்தில் நமது முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினரான இரா. செழியன் அவர்கள், 'அரசியல், சட்டத்தில் இடம் பெற்றுள்ள பதினைந்து மொழிகளிலும் நாடாளுமன்றத்தில் பேசுவதற்கு உரிமை இருத்தல் வேண்டும்' எனக் கோரும் மசோதா ஒன்றைக் கொண்டுவந்தார்.

நாடாளுமன்றத்தில் பேசுகின்ற உரிமை, அரசியல் சட்டத்தில் இடம் பெற்றிருக்கின்ற பதினைந்து மொழிகளுக்கும் இன்று கிடையாது.

அந்தப் பதினைந்து மொழிகளில், இந்தி மொழி ஒன்றுக்கு மட்டுந்தான் நாடாளுமன்றத்தில் பேசுகின்ற உரிமை, அதே அரசியல் சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டிருக்கிறது.

இந்தி மொழிக்கு மட்டுமே வழங்கப்பட்டிருக்கின்ற அந்த உரிமை, மற்ற பதினன்கு மொழிகளுக்கும் கிடைத்திட வேண்டுமானல், அதற்காக அரசியல் சட்டத்தில் இருந்திடக்கூடிய விதியில் திருத்தம் செய்தாகவேண்டும்.

அரசியல் சட்டத்தில் அத்திருத்தத்தைச் செய்கின்ற வரையில், இந்தி மொழி ஒன்றில் நீங்கலாக, நாடாளுமன்றத்தில் வேறு மொழிகளில் பேசுகின்ற உரிமை, மற்ற மொழிவழிவந்த உறுப்பினர்களுக்குக் கிடையாது.

இந்திய மொழியினருக்கு இருந்திடக்கூடிய அதே உரிமை, மற்ற மொழியினருக்கு -- அரசியல் சட்டத்தின்மூலம் -- மறுக்கப் பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் இந்தி மொழிக்குள்ள உரிமை மற்ற மொழிகளுக்கும் இருந்திட வேண்டும் என்ருல், அவ்வுரிமை அரசியல் சட்டத்திலிருக்கின்ற விதியில் திருத்தம் செய்வதன்மூலம்தான் பெற்றிட முடியும்.

இதைக் கருத்தில் கொண்டு, தனி நபர் மசோதா ஒன்றை இரா. செழியன் அவர்கள் நாடாளுமன்றத்தில் கொண்டுவந்தார்.

இதே கருத்துடைய மசோதாவை, இதற்கு முன்னர் செயல்பட்டுவந்த மூன்ருவது நாடாளுமன்றக் காலத்திலும், செழியன் அவர்கள் கொண்டுவந்துள்ளார் ; அப்பொழுது நாடாளுமன்ற நிகழ்ச்சி நிரலில், அம்மசோதா இடம்பெறத் தவறிவிட்டது ; ஆனல், இந்த நான்காவது நாடாளுமன்ற நிகழ்ச்சி நிரலில், இப்பொழுது கொண்டுவந்த அதே கருத்துடைய மசோதாவிற்கு இடம் கிடைத்தது.

இந்தி வெறியில் மூழ்கித் திளைத்துக்கொண்டிருக்கின்ற சேத் கோவிந்த தாஸ் போன்ற காங்கிரசுக்காரர்கூட இம்மசோதாவை ஆதரித்துள்ளார் என்ருல், 'இம்மசோதாவின் மையக் கருத்து நியாயமானது ; சட்டமாக நிறைவேற்றத்தக்கது' என்பதைக் குறிப்பிடாமலே தெரிந்துகொள்ளலாம்.

ஆனல், ஒருமைப்பாட்டை உருவாக்குவதற்கு முதற்படியாக உள்ள இம்மசோதாவை, கொள்கையளவில்கூட ஏற்றுக்கொள்ள இந்திய அரசு விரும்பவில்லை. இந்திய அரசின் சார்பில் இம்மசோதா சட்டமாவதை எதிர்த்த இந்தியத் துணைத் தலைமையமைச்சர், 'கொள்கையளவில்கூட இம்மசோதாவை ஏற்றுக்கொள்ள முடியாது' எனக் கூறிவிட்டிருக்கின்ருர்.

மசோதா தோற்றுவிட்டது ; மசோதாவைத் தோற்கடித்துவிட்டனர்---காங்கிரசுக் கட்சியினர்!

நாடாளுமன்றத்தில், மசோதாவை, 'நியாயமானது' என வரவேற்றும் ஆதரித்தும் பேசிய காங்கிரசுக் கட்சி உறுப்பினர்கள் கூட, மசோதாவிற்கு எதிராகவே வாக்களித்துள்ளனர்.

வேறு ஒரு நிலையில் காங்கிரசுக் கட்சிக் கட்டுப்பாட்டை அலட்சியப்படுத்திவிட்டு, அரசு முடிவிற்கு எதிராக வாக்களித்து இந்தி ஆதிக்கத்துக்கு வரவேற்பு கூறிய சேத் கோவிந்த தாஸ் கூட, தம்மால் ஆதரித்துப் பேசப்பட்ட இம்மசோதாவிற்கு எதிராக வாக்களித்து காங்கிரசுக் கட்டுப்பாட்டிற்கு வலிவூட்டி இருப்பது சிந்தனைக்குரியது.

இப்பொழுது நாடாளுமன்றத்தில், உறுப்பினர்கள் தத்தம் தாய்மொழியில் பேச அனுமதி உண்டு; ஆனல் செழியன் அவர்கள், மசோதா மூலம் கோருவது **அனுமதி** அல்ல---**உரிமை**. இதுபற்றி, திரு. செழியன் கூறியுள்ளது, இதுதான் :–

"அவரவர் தாய்மொழியில் பேச உறுப்பினர்களுக்கு அனுமதி தரப்படுகிறது என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன் ; நான் கேட்பது அனுமதி அல்ல—உரிமை ! இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டவருக்கு எந்த உரிமை இருக்கிறதோ, அந்த உரிமை தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட எனககும் வேண்டும் என்று கேட்கிறேன். இந்தி பேசுபவர்களுக்குத் தரப்படும் உரிமை, இந்தியல்லாத மற்ற மொழியினருக்கும் தரப்படவேண்டும் என்று கேட்கிறேன். அந்த உரிமை அரசியல் சட்டத்திலேயே வழங்கப்பட வேண்டும் என்று கேட்கிறேன்.

" அவையின் தலைவராக இருப்பவரின் விருப்பு --வெறுப்பைப் பொறுத்ததல்ல ; அரசியல் சட்ட உரிமையாக அது அமைய வேண்டும்.

"அவைத் தலைவர் தாராள மனம் படைத்தவராக இருந்தாலும் இந்த அவையின் நடைமுறை விதிகள் எங்களுக்குச் சாதகமாக எழுதப்பட்டாலும் -- கடைசியில் நீதிமன்றத்தில் ஒரு வழக்கு சென்ருல், அரசியல் சட்டத்தில் கூறப்பட்ட முறை நிலைபெறுமே தவிர, மற்ற ஏற்பாடுகள் தள்ளப்பட்டுவிடும். அதனுல்தான், அரசியல் திருத்தச் சட்ட மசோதாவை நான் கொண்டுவந்துள்ளேன்.

"இந்த மசோதாவில் ஒரு குறிப்பிட்ட பிரச்சினையே முன் வைக்கப்பட்டுள்ளது ; 'நாடாளுமன்றத்தில் எந்த மொழிகளை வழங்க அரசியல் சட்டப்படி நாம் அனுமதிக்கலாம்' என்பது தான் அது !

" பக்கத்திலுள்ள இலங்கைத் தீவுக்குச் சென்ருல்—அங்குள்ள நாடாளுமன்றத்தில்–தமிழ் உறுப்பினர்கள் தமிழில் பேச அனுமதிக்கப்படுகிருர்கள் ; அவர்கள் பேசுவது அப்படியே குறிப்பேட்டில் இடம் பெறுகிறது.

" சிங்கப்பூருக்குச் சென்ருல், அங்கே சீன மொழி–மலேசிய மொழி–தமிழ், ஆங்கிலம் ஆகிய நான்கு மொழிகளும் அனுமதிக்கப்படுகின்றன ; மலேசியாவிலும் இதேபோல தமிழுக்கு இடம் தரப்படுகிறது.

" இலங்கையில்—மலேசியாவில் — சிங்கப்பூரில் — தமிழுக்குக் காட்டப்படும் மதிப்பு---தரப்படும் உரிமை இந்தியாவில் காட்டப்படவில்லை ; இந்த மாமன்றத்தில் தரப்படவில்லை !

"சின்னஞ்சிறு இடமாக உள்ள சிங்கப்பூரில் நான்கு மொழிகள் அனுமதிக்கப்படுகின்றன--அங்குள்ள நாடாளுமன்றத்தில்!

" ஆனல், பெரிய இந்தியாவில்–ஒரு துணைக் கண்டம்போல் பரந்து கிடக்கும் இந்தியாவில்–இரஷ்யாவைவிட்டு மற்ற ஐரோப்பா முழுவதையும் தன்னுள் அடக்கவல்ல நிலப்பரப்பை உடைய இந்தியாவில்–15 மொழிகளுக்கு இடம் தரப்படவில்லை. ஏன்? தரமுடியாதா, தரக்கூடாதா? தருவதற்கான பெருந்தன்மை உங்களிடமில்லையா ? உரிமையைப் பெறுவதற்கான தகுதி எங்களுக்கு இல்லையா ?

" அரசியல் சட்டத்தின் 120-வது பிரிவு திருத்தப்படாத வரையில், இந்தி பேசாத மற்றவர்களுக்கு அந்த உரிமை கிடையாது !

" என் மொழியில் பேச–என் தாய் மொழியில் என் கருத்துக்களைக் கூற உரிமை கேட்கிறேன்–நீதி கேட்கிறேன் ! இந்திய சனநாயகத்தின் உச்சக் கட்டமாக விளங்கும் இந்த மாமன்றத்தில் அந்த உரிமைக்கு இடம் கேட்கிறேன் !"

—கா. க.

இந்திரா --- மொரார்ஜி மீது குற்றச்சாட்டுத் தீர்மானம்

மக்களவை விவாதிக்கும்

புதுடில்லி, ஆக. 16—

துணைத் தலைமையமைச்சர் மொரார்ஜி தேசாய்மீதும் தலைமையமைச்சர் இந்திரா காந்திமீதும், ச. சோ. கட்சி உறுப்பினர் மதுலிமாயியால் குற்றஞ்சாட்டிக் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை வரும் திங்களன்று மக்களவை விவாதிககும்.

அவைத் தலைவர் சஞ்சீவ ரெட்டி இத்தீர்மானத்துக்கு அனுமதி அளித்துவிட்டார்.

இத் தீர்மானத்தில் கூறப்பட்டிருப்பதாவது :—

" துணைத் தலைமையமைச்சரும், நிதியமைச்சருமான மொரார்ஜி தேசாய், தமது மகனின் வணிகத் தொடர்பு சம்பந்தமாக சபைக்கு ஏப்ரல் 30, சூலை 24 ஆகிய தேதிகளில் தவருன தகவல்கள் தந்ததற்காகவும், இதை அறிந்தும் தலைமையமைச்சர், துணைத் தலைமையமைச்சரை இராஜினமா செய்யக் கோராமலிருந்ததற்காகவும், சபை இவ்விருவரின் நடவடிக்கைகளிலும் அவநம்பிக்கை தெரிவிக்கிறது."

இலட்சக்கணக்கில் மதிப்புள்ள டிரான்சிஸ்டர்கள் அழிக்கப்பட்டதற்குக் காரணம்?

அமைச்சரின் சமாதானம்

'பெங்களுர் பாரத் எலக்ட்ரானிக்' எனும் அரசு நிறுவனத்தில் தயாரிக்கப்பட்ட இலட்சக்கணக்கான ரூபாய் மதிப்புடைய டிரான்சிஸ்டர் ரேடியோக்கள், சிமெண்டுக் கலவையுடன் கலக்கப்பட்டு பாதை அமைப்பதற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கிறதாம் !

கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில், பாதுகாப்புத் துறைத் துணையமைச்சர் எல். என். மிஸ்ரா மக்களவையில் இத்தகவலை வெளியிட்டிருக்கிருர்.

தரம் குறைந்த டிரான்சிஸ்டர்கள் இப்படி அழிக்கப்பட்டதாகவும், இதன்மூலம், சுரம் குறைந்த பொருட்கள் மார்க்கெட்டில் விற்பனையாகாமல் தடுக்கப்பட்டதாகவும் அவர் சமாதானம் கூறியிருக்கிருர்.

"இராணுவக் கழகத்துக்கு வழங்கிய ரூ. 25 இலட்சம் மதிப்புடைய டிரான்சிஸ்டர்கள் தரம் குறைந்தவை என அறிவிக்கப்பட்டதா ?"

என்ற கேள்விக்கு அமைச்சர், 'மேற்படி தொழிற்சாலை இந்த மாதிரி டிரான்சிஸ்டர்களை வழங்கவில்லை' என்று மட்டுமே பதிலளித்துள்ளார்.

சென்னை மாநகராட்சித் தேர்தல்--சில குறிப்புகள்

சென்னை, ஆக. 16—

சென்னை மாநகராட்சித் தேர்தல் அக்டோபர் திங்கள் இறுதியில் நடைபெறும் ; தேதி இன்னும் முடிவாகவில்லை.

தயாரிக்கப்பட்டுள்ள வாக்காளர் பட்டியல், இத்திங்கள் 24-ம் நாள் வெளியிடப்படும்.

வாக்காளர் பட்டியலில் தங்கள் பெயர்கள் விட்டுப் போயிருந்தாலோ அல்லது தவறுதலாகப் பெயர்கள் குறிப்பிடப்பட்டிருந்தாலோ திருத்திக்கொள்ள மாநகராட்சிக்கு மனுவுக்கு 50 காசு வீதம் கட்டணம் செலுத்தி மனுச் செய்யவேண்டும்.

கடந்த சூன் திங்களில் வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்ட போது, 1,25,430 பேர், 'எங்கள் பெயர்களைப் புதிதாக வாக்காளர் பட்டியலில் சேர்த்துக்கொள்ள வேண்டும். என்று மனுச் செய்து கொண்டனர் ; அப்போது தயாரிக்கப்பட்ட வாக்காளர் பட்டியலில் 11,33,258 பேர் வாக்காளர்களாக இடம் பெற்றிருந்தனர் ; இவர்களில் 6,06,459 பேர் ஆண்கள் ; 5,26,799 பேர் பெண்கள்.

வாக்காளர் பட்டியலிலிருந்து பெயர் நீக்கம் கோரி 7229 மனுக்கள் வந்தன ; திருத்தம் கோரி 187 மனுக்கள் வந்தன.

வாழ்வு--உரிமை மட்டுமன்று--கடமை

நாட்டு வளத்தைப் பெருக்கிட அணி திரண்டு வாரீர்!

மகிழ்ச்சியும் எழுச்சியும் பெறுவோம்--கடமையையும் கவனத்திலிறுத்துவோம்

முதலமைச்சர் அண்ணு வேண்டுகோள்

"சுதந்தரப் போராட்டத்தில் வெற்றி கண்ட நாடு, இனி, வளம் பெருக்கிட--வாழ்வு சிறந்திட--பசியையும் பஞ்சத்தையும் பற்ருக்குறையும் போக்கிட--போர் தொடுத்தாக வேண்டும்!

"சமூகக் கொடுமைகளை வீழ்த்தி மக்களுக்குச் சமத்துவ வாழ்வு பெற்றளித்திடப் போர் நடாத்தித் தீரவேண்டும். விழா தரும் மகிழ்ச்சி நமக்கெல்லாம் இதற்கான ஆற்றலைத் தந்திடும் என்று நம்புகிறேன்"

இவ்வாறு முதலமைச்சர் அண்ணு அவர்கள், சென்னை வானெலி நிலையத்திலிருந்து விடுத்த சுதந்தர நாள் செய்தியில் தெள்ளத் தெளிவுற விளக்கிக் கூறினர்; அவரது உரையின் ஒரு பகுதி நேற்றைய இதழில் வெளிவந்திருக்கிறது; பிற்பகுதி வருமாறு:—

ஆகஸ்டு 15-ல் விழாக் கொண்டாடும்போது--நமது தேசியக் கொடி பட்டொளி வீசிப் பறந்திடும்போது--காண்போர் அனைவரும், 'இது நமது உரிமைக் கொடி; சமத்துவக் கொடி; சமதர்மக் கொடி' என்று பெருமிதம் கொண்டிடும் நிலையைப் பாடுபட்டுப் பெற்ருக வேண்டும்.

இந்தத் தூய பணிக்காகத் தம்மை ஒப்படைக்கக்கூடிய ஆடவருக்கும், ஆரணங்குகளுக்கும், நாட்டின் சார்பில் அன்பழைப்பு விடுத்திடும் அருமைத் திருநாள்—ஆகஸ்டு 15!

நாட்டு வளம் பெருக்கிட உழவர் பெருமக்களும், தொழிலாளத் தோழர்களும் அணி திரண்டு நின்றிட வேண்டும்; உற்பத்தியைப் பெருக்கிட வேண்டும்; நாட்டுச் செல்வம் மிகுந்திட வேண்டும்.

அந்தத் தூயவர்களின் உழைப்புக்கு ஏற்ற வண்ணம், அவர்களின் வாழ்வு செம்மைப்பட வேண்டும்; அதற்கான சமூக நீதி நிலைத்திட வேண்டும்.

"வாழ்வு, உரிமை மட்டுமல்ல---கடமை" என்பது, எவரும் மறுக்க முடியாத பேருண்மையாகும்.

'கண்மூடிகளாக மக்கள் இன்னும் உள்ளனர்' என்று எண்ணிக்கொண்டு, உழைப்பின் பலனை வஞ்சகமாகச் சுரண்டிடும் ஆதிக்கக்காரர்கள் சுதந்தரத்தின் பகைவர்கள்!

உழைப்பு—மிகுந்த பலனைத் தந்திட, தொழில் உலகில் அமைதி நிலவிட வேண்டும்--அமளியற்ற நிலை வேண்டும். மனித சக்தியாயினும், இயந்திரத்தின் சக்தியாயினும் முழு அளவில் பயன்படும் வழிகாண வேண்டும்.

மக்கள் தொகை, எவரையும் மிரட்டும் அளவுக்கு வளர்ந்து கொண்டே போகும் நமது நாட்டில், உற்பத்தியின் அளவு-முறை-வகை—திறம்—தரம் எனும் எதிலேயும் சுந்தகமோ, குலைவோ, குறையோ ஏற்பட்டுவிட்டாலும், அடிமைத்தனத்தின்போது அனுபவித்த அல்லலையும் மிஞ்சியதான அல்லல் நம்மைத் தாக்கும்! இதனை நன்கு உணர்ந்து, 'சுயராஜ்யம் என்பது சுக ராஜ்யமாகிறது' என்று மகிழ்ந்து கூறத்தக்க நிலை பெற்றிடப் பாடுபட வேண்டும்.

இதற்கு எல்லோரையும் கரம் கூப்பி அழைத்து--அணிகளாக அமைத்து---உடனிருந்து பணியாற்றுவதே அரசின் கடமை! அந்த அரசினை இன்று நடத்திச் சென்றிட அனுமதி பெற்றவன்—என்ற முறையில் நாட்டினரே! நல்லோரே! உழவர்களே! உழைப்பாளிகளே! தொழில் வித்தகர்களே! விஞ்ஞானிகளே! அலுவலர்களே! ஆசிரியப் பெரியோர்களே! மாணவ நண்பர்காள்! உங்கள் அனைவரையும் அழைக்கின்றேன்.

"விழா நாள் இன்று; விழிகளில் நடமிடும் நாள்; சோலாகலமாகக் கொடி பறந்திடும் நாள்; நாட்டும் பண் எங்கும் கேட்டிடும் நாள்; மகிழ்ச்சிபெறுவோம்-எழுச்சி பெறுவோம்; ஆனல் அதேபோது, கடமையைக் கவனத்தில் கொள்வோம்!

எத்தனை கடுமையான உழைப்பு தேவை என்ருலும், 'நாட்டுக்காகத் தந்திடுவோம்' என்ற உறுதி கொள்வோம்! குருதி கொட்டிப் பெற்ற சுதந்தரத்தின் பயனைப் பெற்றிட உழைப்போம், வாரீர் என்று அனைவரையும் அழைக்கின்றேன்."

நகராட்சிகள் விழிப்புடன் செயல்படுவது அவசியம்

அதிகவருமானம்கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு

நகராட்சிகளின் உரிமையும் கடமையும்--- அமைச்சர் கே. ஏ. மதியழகன் தெளிவுரை

விருதுநகர், ஆக. 16—

"ஒவ்வொரு ஊரிலும் உள்ள பட அரங்குகளில் வசூலிக்கப்படும் பணம் 90 சதவிகிதத்தை அவ்வூர் நகர---ஊராட்சி மன்றங்களுக்கே தமிழக அரசு கொடுத்துவிடுகிறது; மீதமுள்ள 10 சதவீத வரியை வணிக வரித் துறைகளின் நிர்வாகச் செலவுகளுக்கு ஒதுக்கப்படுகிறது.

"இப்படி வசூலிக்கப்படும் இந்தப் பணம் அரசின் கருவூலத்தில் சேர்க்கப்பட்டு மூன்று மாதத்திற்கு ஒருமுறை நகராட்சிகளுக்கும், மற்ற நிறுவனங்களுக்கும் வழங்கப்படுகிறது; அவ்வாறு அரசாங்கக் கருவூலத்தில் செலுத்தப்படாமல் நேரடியாகவே நகராட்சிகளுக்குத் தரப்பட வேண்டும் என்ற யோசனை முறையானதல்ல.

"கேளிக்கை வரிகளை ஏமாற்றுகின்ற நிலைமை பெரும் அளவில் இருக்கிறது; போலி டிக்கெட்டுகள், கள்ள முத்திரைகள் ஆகிய முறைகேடான காரியங்களைத் தடுப்பதற்கு வணிக வரித் துறையினர் தீவிரக் கவனம் செலுத்தி வருகின்றனர். பொதுமக்களின் விழிப்புணர்ச்சியும், கவலையும் இக்கெடுதல்கள் நடைபெருமல் தடுப்பதற்கு இன்னமும் உற்சாகமாக இருக்குமேயானல், கோடிக்கணக்கான ரூபாய் நகராட்சிகளுக்கு வருமானமாக வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது."

"நகராட்சிகளின் நிதி நிலைப் பற்ருக்குறைபற்றி அரசு தெளிவாகத் தெரிந்துகொள்ள இந்த நிலைமைகளை மாற்றுவதற்கு மத்திய அரசு--மாநில அரசு ஆகியவைகளின் இடையே, இப்போது வரையறுக்கப்பட்டிருக்கின்ற நிதி ஆதாரங்கள், வரி விதிக்கும் உரிமைகள் ஆகியவைபற்றிய பெரிய மாறுதல் அவசர அவசியமாகும்.

"அரசியல் சாசனத்தை மாற்றி மாநில அரசுகளுக்கு அதிக அதிகாரங்கள் வருவதற்கான வாய்ப்பு ஏற்படுத்துவதற்கு நகராட்சிகள் பொது மக்களின் கருத்தை உருவாக்குவதற்குக் கடமைப்பட்டிருக்கின்றன."

—விருதுநகர் நகராட்சி வரவேற்பில்

என்.எஸ்.கே. நினைவுக் கலைவிழா

என். வி. நடராசன் பாராட்டு

தமிழக அமெச்சூர் நாடக நடிகர் சங்கம் நடத்திவரும் என். எஸ். கே. நினைவுக் கலைவிழா 4—8—68 அன்று துவக்கி வைக்கப்பட்டது.

முதல் நாள் 'தென்னவன் தூது' என்னும் நாடகம், அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன் எம்.எல்.சி., தலைமையிலும்—டாக்டர் ஹண்டே முன்னிலையிலும் நடைபெற்றது.

திரு. என். வி. நடராசன் அவர்கள், கலைநிகழ்ச்சி அமைப்பாளர்களையும், கதாசிரியர் ஏ. நெடுமாறன்—பாடல் எழுதிய பி. வி. கிரி—மற்றும் நடிக, நடிகையரைப் பாராட்டிப் பேசினர்.

கம்பெனிகளிடமிருந்து ....

ஆருண்டுகளில் காங்கிரசு பெற்ற நன்கொடை!

ரூ. 2,05,22,798

புதுடில்லி, ஆக. 13

கடந்த ஆறு ஆண்டுகளில் கம்பெனிகளிடமிருந்து அதிக நன்கொடை பெற்ற அரசியல் கட்சி காங்கிரசுதான்!

இது பற்றிய அறிக்கையை, மக்களவையில் தொழில் அமைச்சர் பக்ருதீன் அலி அகமது தாக்கல் செய்தார்; 1962-லிருந்து 1968 பிப்ரவரி வரையில் தரப்பட்டுள்ள நன்கொடை விவரங்களை அறிக்கை தெரிவித்தது.

கட்சிகளுக்குக் கிடைத்த தொகைகள் வருமாறு:—

காங்கிரசு	ரூ.	2,05 22,798
சுதந்தரா	ரூ.	16,02,553
கம்யூனிஸ்டு	ரூ.	8,753
பி. சோ.	ரூ.	66,607
ஜனசங்கம்	ரூ.	1,20,399
ச. சோ.	ரூ.	24,520
தி. மு. க.	ரூ.	925
தமிழ் தேசியக் கட்சி		5
திராவிடக் கழகம்	ரூ.	5
தமிழரசுக் கழகம்	ரூ	5

தமிழக மின்சார வாரியம்

டெண்டர் அறிக்கை

கீழ்க்காணும் பொருள்கள் வழங்குவதற்கான முத்திரையிட்ட தனித்தனி விலை ஒப்பங்கள் (Tenders) அடியிற் கையொப்பமிட்டவரால் செங்கற்பட்டு மாவட்டம் காஞ்சிபுரம் இரயில்வே சாலையிலுள்ள அவரது அலுவலகத்தில் குறிப்பிட்ட முடிவு தேதிகளில் பிற்பகல் 1-00 மணிவரை பெற்றுக்கொள்ளப்படும்.

வரிசை எண்	சாற்றுக் குறிப்பு எண்	பொருள்களின் விவரம்	தயாரிக்கும்— விநியோகிக்கும் இடம்	முடிவு நாள்
1.	எஸ்இசி/டி 42/68-69	7 315 மீட்டர் (24') நீளமுள்ள ஆர். சி. சி. கம்பங்கள் செய்தல்	காஞ்சிபுரம் (பஞ்சுப்பேட்டை)	5-9-68
2.	எஸ்இசி/டி. 43/68-69	ஷை	தக்கோலம்	5-9-68
3.	எஸ்இசி/டி. 44/68-69	ஷை	உத்திரமேரூர்	5-9-68
4.	எஸ்இசி/டி. 45/68-69	ஷை	பெரியகுப்பம் (திருவள்ளூர் அருகில்)	6-9-68
5.	எஸ்இசி/டி. 46/68-69	ஷை	கீழானூர்	6-9-68
6.	எஸ்இசி/டி. 47/68-69	ஷை	செங்கற்பட்டு	7-9-68
7.	எஸ்இசி/டி. 48/68-69	ஷை	மதுராந்தகம்	7-9-68
8.	எஸ்இசி/டி. 49/68-69	ஷை	திருக்கழுக் குன்றம்	7-9-68
9.	எஸ்இசி/டி. 50/68-69	ஷை	அச்சிரப் பாக்கம்	7-9-68
10.	எஸ்இசி/டி. 51/68-69	ஷை	அத்திமாஞ்சேரி பேட்டை	6-9-68
11.	எஸ்இசி/டி 52/68-69	8.23 மீட்டர் (27') நீளமுள்ள ஆர். சி. சி. கம்பங்கள் செய்தல்	காஞ்சிபுரம் (பஞ்சுப் பேட்டை	5-9-68
12.	எஸ்இசி/டி. 53/68-69	ஷை	கீழானூர்	6-9-68
13.	எஸ்இசி/டி. 54/68-69	ஷை	திருக்கழுக் குன்றம்	7-9-68
14.	எஸ்இசி/டி. 55/68-69	ஸ்டேசெட்செய்தல்	காஞ்சிபுரம் மத்திய பண்டக சாலை	8-9-68
15.	எஸ்இசி/டி. 56/68-69	எர்த்திங் டிவைஸ் செய்தல்	காஞ்சிபுரம் மத்திய பண்டகசாலை	8-9-68
16.	எஸ்இசி/டி. 57/68-69	AAC, ACSR கழிவுத் துண்டுகளிலிருந்து அலுமினியம் நாப்புகள் செய்தல்	ஷை	9-9-68
17.	எஸ்இசி/டி. 58/68-69	25 மில்லி மீட்டர் விட்டமுள்ள ஜி. ஐ. விவசாய மின் இணைப்பு குழாய்கள்	ஷை	3-9-68
18.	எஸ்இசி/டி. 59/68-69	40 மி. மீ. விட்டமுள்ள ஜி.ஐ. குழாயிலிருந்துசெய்யப்பட்ட எர்த் குழாய்கள்	ஷை	3-9-68
19.	எஸ்இசி/டி. 60/68-69	"பி" மாடல் பெட்டிக்குவேண்டிய ஆர்டினரி கிளாம்புகள்	காஞ்சிபுரம் மததிய பண்டக சாலை	3-9-68
20.	எஸ்இசி/டி. 61/68-69	610மி.மீ.×20 வாட் குழல் விளக்குகள்	ஷை	2-9-68
21.	எஸ்இசி/டி. 62/68-69	ஷை	செங்கற்பட்டு பண்டக சாலை	2-9-68
22.	எஸ்இசி/டி. 63/68-69	ஷை	திருவள்ளூர் பண்டக சாலை	2-9-68

டெண்டர் படிவங்களின் விலை ஒவ்வொரு சாற்றுக் குறிப்புப் பிரதிக்கும் ரூ. 5.15 (விற்பனை வரி உட்பட) ஆகும்.

மேற்படி டெண்டர் சாற்றுக் குறிப்புப் பிரதிகள் (Tender Specification copies) வேண்டுவோர், பிரதி ஒன்றுக்கு ரூ. 5 15 வீதம், 'தலைமைக் கணக்கர் (செலவுப் பிரிவு), செங்கற்பட்டு மின் பெருவட்டம் (Chief Accountant / Expenditure, Chingleput Elecy. System), இரயில்வே சாலை, காஞ்சிபுரம்' என்ற முகவரிக்குப் பண அஞ்சல் (Money Order) அல்லது டிமாண்ட் டிராப்ட் (Demand Draft) மூலமாகவோ அல்லது நேரிலேயோ செலுத்தி அவற்றை 17—8—68 தேதியிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். மேற்படி தொகை எக்காரணத்தை முன்னிட்டும் திருப்பித்தரப்படமாட்டாது. இத்தொகையைப் பண அஞ்சல் மூலமாக அனுப்புவோர் தமது முகவரியையும், தேவையான பிரதிக்குரிய சாற்றுக் குறிப்பு எண்ணையும் (Specification Number) தெளிவாகக் குறிப்பிட வேண்டும். பிரதிகள் சாதாரண அஞ்சல் மூலமாகவே அனுப்பப்படும். அவை உரியவர்க்குச் சேர்ப்பிக்கபடாவிட்டால் அதற்கு மின்சார வாரியம் பொறுப்பல்ல.

உரிய தாள்களில் சேர்ப்பிக்கப்படாத விலை ஒப்பங்களும், குறித்த காலம் தவறி வருபவையும் கண்டிப்பாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. விலை ஒப்பங்கள் குறிப்பிட்ட முடிவு தேதிகளில் பிற்பகல் 2-30 மணிக்கு விரும்பி வந்திருக்கும் ஒப்பதாரர்களின் முன்னிலையில் திறக்கப்படும்.

கீழே கையொப்பமிட்டவர் எந்த ஒரு விலை ஒப்பத்தையோ அல்லது எல்லா விலை ஒப்பங்களையுமோ, எவ்விதக் காரணமும் காட்டாமல் நிராகரிக்கவும், இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட விலை ஒப்பதாரர்களுக்கிடையே ஆணையைப் (order) பகிர்ந்து கொடுக்கவும் உரிமை பெற்றவராவார்.

மேற்பார்வை பொறியாளர்,
செங்கற்பட்டு மின் பெரு வட்டம்,
காஞ்சிபுரம்

சோர்வு மனப்பான்மை அகலட்டும்

உற்பத்திப் பெருகுவது அவசியம்

ஏராளமாகக் குவிந்துள்ள கடன்களுக்கு நாம் பதில் சொல்லித் தீரவேண்டும்

விடுதலை நாள் விழாவில் முதலமைச்சர் அண்ணா கனிவுரை

சென்னை, ஆக. 17—

"மிகப் பெரிய நாட்டை வெள்ளையர் விட்டுச் சென்றனர்; அப்போது நாம் எண்ணிக்கையில் 40 கோடி பேர்களாக மட்டுமே இருந்தோம்; இப்போது 50 கோடி அளவில் வளர்ந்திருக்கிறோம்! இப்படிக் கூட்டமாக வளர்ந்திருக்கிறோமே தவிர, தனியாகத் தனியாக மக்கள் தேய்ந்திருக்கிறார்கள் -- ஓய்ந்திருக்கிறார்கள் -- மாய்ந்துகொண்டும் வருகிறார்கள்! கண்களிலே ஒளியில்லை! உடலிலே உறுதியில்லை! நெஞ்சத்திலே தெளிவில்லை! இயற்கை தரும் செல்வத்தைப் பயன்படுத்தும் வாய்ப்பும் இல்லை! ஒரு சிலரிடத்தில் உள்ள திறமையைப் பயன்படுத்திக்கொள்ளும் மனப்பகுவமில்லை!

"சுதந்தரம் பெற்ற பிறகு நாம் எதை ஏற்றுமதி செய்கிறோம் -- முக்கியமான பொருள் எதுவுமே இல்லை! வெளிநாட்டிலிருந்து அரிசியை இறக்குமதி செய்கிறோம்! கோதுமை இறக்குமதி செய்கிறோம்! கோழிக் குஞ்சுகளைக்கூட இறக்குமதி செய்கிறோம்! ஆனால், ஏற்றுமதியாகும் பொருளில் பெருமைப்படத்தக்கது எது தெரியுமா?—'சாந்தமாக இருங்கள்; சமாதானமாக இருங்கள்' எனக் கூறும் நல்லுரைகளே! காலிகோ பைண்டு செய்யப்பட்ட பகவத் கீதைகள்! நமது பாரம்பரியத்தைப் பற்றிய விளக்கங்கள் -- இது தவிர வேறென்ன!

"நம்மைச் சுற்றிலும் பிற நாடுகளிலிருந்து இறக்கப்பட்ட பொருள்கள் -- இந்தப் பெரிய கடனுக்கு நாம் பதில் சொல்லியாக வேண்டும்!

"அதற்கு உற்பத்தித் திறன் பெருக வேண்டும்; உழைக்கும் திறன் இல்லாமல் இல்லை. ஆனால் அந்த உழைப்பில் நமக்கு ஒரு சோர்வு மனப்பான்மை இருக்கிறது -- அது அகல வேண்டும்; 'அவனுக்கென்ன தெரியும்; இவனுக்கென்ன தெரியும்' என்று எடுத்தெறிந்து பேசும் போக்கு மாறி, 'அவரவருக்கு ஒவ்வொரு துறையில் திறமை உண்டு' என்று எண்ணிடும் நிலைமை உருவாக வேண்டும்."

இவ்வாறு முதலமைச்சர் அண்ணா அவர்கள், சென்னை மாவட்ட தி.மு.க. சார்பில் நடைபெற்ற விடுதலை நாள் விழாவில் பேசுகையில் சுட்டிக்காட்டி விளக்கினார்; அவரது உரையின் சுருக்கம் வருமாறு:

பேத உணர்ச்சியைப் புகுத்தி விட்டனர்!

"சுதந்தர நாள் என்பது, பிற நாடுகளில் கோலாகலமாகக் கொண்டாடப்படும் ஒரு திருநாளாகும். வீடுகள் மகிழ்ச்சிக் கூடங்களாகவும், வீதிகள் விழாக்கோலத்துடனும், எழில் பூத்திருக்க --- ஆடவரும் பெண்டிரும் அழகான உடை உடுத்தி-- ஒருவருக்கொருவர் முகமன்கூறி-தேசியக் கீதத்தை இசைத்து களிநடம் புரிவார்கள்.

ஆனால் இங்கோ, சிலரை ஒதுக்கி வைத்துவிட்டு ஒரு சிலர், 'தாங்கள்தான் சுதந்தரத்தைப் பெற்றவர்கள்'—'சுதந்தரத்தைக் காப்பாற்ற அருகதை உள்ளவர்கள்'—என்ற முத்திரையைத் தாங்களாகப் பதித்துக்கொண்டு பேத உணர்ச்சியை இந்த நாட்டில் புகுத்திவிட்டார்கள்!

உலகுக்கு மெய்ப்பிக்க ஒன்று கூடிடுவோம்

இந்த ஒரு நாளிலாவது வேற்றுமைகளை மறந்து—ஒன்றுபட்டு விழாக் கொண்டாடிட வேண்டும். இந்த வேண்டுகோளை சென்ற ஆண்டு நடைபெற்ற இதே விடுதலை நாள் விழாவில் விடுத்தேன்; இந்த வேண்டுகோளைக் கேட்டவர்கள் ஆமோதித்தார்கள்; ஆனால், யாருக்கு அந்த வேண்டுகோள் விடப்பட்டதோ அவர்கள், பதிலேதும் தரவில்லை! அவர்கள் செவியில் ஏதேதோ சப்தங்கள் விழுந்து கொண்டிருந்ததால் அதைக் கவனிக்கவில்லை போலும்.

இந்த ஆண்டும் அந்த வேண்டுகோளை விடுக்கிறேன்; இந்த ஒரு நாளிலாவது நாம் அனைவரும் கட்சி வேற்றுமைகளை மறந்து அனைவரும் கூடி நடத்துகிற திருநாள் என்பதை உலகுக்கு மெய்ப்பிப்போம்!

இப்படி ஒருநாள் கூடி விடுதலை நாள் கொண்டாடுவதால் 'கட்சிப் பிடிப்புப் போய்விடும்' என்று யாராவது கருதினால், அத்தகைய பிடிப்பு வெகு நாள் நீடிக்கத்தக்க கட்சிப் பிடிப்பு அல்ல!

கொள்கையில் உறுதியிருக்குமானால், மாற்றுக் கட்சியினருடன் கலந்து பழகுவதால் கட்சிப் பற்று போய்விடாது!

ஆகவே, ஆகஸ்டு 15-ம் நாளை எல்லாக் கட்சிகளும் சேர்ந்து நடத்தும் வகையில் ஒரு திட்டத்தைப் பெருந் தலைவர்கள் வகுத்திட வேண்டும்.

ஆகஸ்டு 15-ம் நாள் எங்கு திரும்பினாலும், நாம் சுதந்தரம் பெற்ற வரலாறு ஓவியங்களாகத் தீட்டப்பட்டிருக்க வேண்டும். அந்தத் தியாகக் காவியத்தை பேச்சாலும், எழுத்தாலும், பாட்டாலும், கூத்தாலும் புதிய தலைமுறையினருக்கு அறிவிக்க வேண்டும். பெற்ற சுதந்தரத்தைக் காப்பாற்றித் தீரவேண்டிய கடமைபற்றி எடுத்துரைக்க வேண்டும்.

பெருந் தலைவர்கள் முயற்சி செய்வரா?

உண்மையான சுதந்தரத் திருநாள் எப்போது வரும் என்றால் காமராசர் தலைமையில் நான் உட்பட அனைத்துக் கட்சியினரும் அந்தத் திருநாளைக் கொண்டாடும்போதுதான்! அந்த உண்மையான சுதந்தரத் திருநாள் அடுத்த ஆண்டே வாய்க்கப் பெற பெருந்தலைவர்கள் முயற்சி எடுக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்."

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு [illegible] அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-[illegible]) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

ஆலந்தூர் பெருநகர தி. மு. க. தோழர்களுக்கு:

"18—8—68 காலை 9-மணியளவில் நங்கநல்லூர் கணேஷ் திரைப்படக் கொட்டகையில், ஆலந்தூர் பெருநகர தி. மு. க. பொது உறுப்பினர் பேரவைக் கூட்டம் நடைபெறும்; கழகத் தோழர்களும் வட்டக் கிளைச் செயற்குழு உறுப்பினர்களும், வட்டப் பிரதிநிதிகளும் தவறாது வருகை தருமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்" என, செயலாளர் ம. ஆபிரகாம் அறிவிக்கிறார்.

டி. என். தங்கதுரை சென்னை வருகை

சென்னை, ஆக. 17—

வங்கத் தமிழர் சங்கத் தலைவரும், அண்ணா மணி விழா மலர்க் குழுத் தலைவருமான திரு. டி. என். தங்கதுரை அவர்கள், செக்கோஸ்லோவேகியா, டென்மார்க், ரோம், பாரீஸ், போலந்து போன்ற இடங்களுக்குச் சென்றுவிட்டு 18--8--68 காலை 7-50 மணியளவில் சென்னை–மீனம்பாக்கம் விமான நிலையத்தில் வந்திறங்குகிறார்.

வங்கத் தமிழர் சங்கச் செயலாளர் மு. இராமையா, மற்றும் அண்ணா மணி விழா மலர்க் குழுச் சார்பில் சா. கணேசன் எம்.சி., நாராயணன், ஓவியர் முத்து ஆகியோரும், மன்ற நண்பர்களும் விமான நிலையத்தில் அவருக்கு வரவேற்பு அளிக்க ஏற்பாடு செய்து வருகின்றனர்.

நீலகிரி மாவட்டக் கழகத் தேர்தல்

நீலகிரி மாவட்டக் கழகத் தேர்தல் 18—8—68 காலை 10 மணிக்கு உதகை நகரிலுள்ள தி. மு. கழகக் கட்டிடத்தில் நடைபெறும். தேர்தல் ஆணையாளர்: வை. இரத்தினவேலு பி.ஏ.

—தலைமைக் கழகம் (தி. மு. க.

நடக்க இருப்பவை

18--8--68

கன்னிவாடி

தி. மு. க. சார்பில் மாலை 7 மணிக்கு சவகர் திடலில்; தலைவர்: கோ. சத்திவேல்; பேசுவோர்: மா. தங்கவேலர், ச. முத்துச்சாமி, ப. காத்தமுத்து, சு. கிருட்டிணமூர்த்தி, த. பழனியப்பன், மு. பாண்டியன், மற்றும் பலர்.

சிவகாசி

சவுந்திரபாண்டியனார் நினைவு மன்றச் சார்பில், இரவு 7 மணிக்கு கீரைக்காரன் திடலில்; தலைவர்: சி. பெ. குருசாமி; பேசுவோர்: தேவகிபாண்டியன், கோ. வரதராசன், ஏ. துரைக்கண்ணன், கா. மு. மதார், வே. கருணாகரன், க. மாரியப்பன், எஸ். எம். பொன்னுச்சாமி, எம். எஸ். தங்கமணி மற்றும் பலர்.

அரிசிப்பாளையம் (சேலம்)

தி. மு. க. சார்பில் மாலை 7-மணிக்கு ஆர். டி. பால் தெருவில்; தலைவர்: க. ஆ. மு. இராமலிங்கம்; பேசுவோர்: இரா. வெற்றிக்கொண்டான், ஈ. ஆர். கிருஷ்ணன் எம்.எல்.ஏ., கே. செயராமன் எம்.எல்.ஏ., க. இராசாராம் எம்.பி., சிற்றுளி சுப்பிரமணியம், சி. பழனியப்பன் எம்.சி., மற்றும் பலர்.

மாயூரம்

உதயசூரியன் படிப்பகச் சார்பில் மாலை 6-மணிக்கு ஆனதாண்டவபுரம் ரோடில் (காளியம்மன் கோயில் எதிரில்); தலைவர்: ஜி. இராமகிருஷ்ணன்; பேசுவோர்: என். கிட்டப்பா எம்.எல்.ஏ., எஸ். கணேசன் எம்.எல்.ஏ., எம். இராசாங்கம். (மணி–சாமி குழுவினர் கலைநிகழ்ச்சி நடைபெறும்.)

மன்னார்குடி

18-வது வட்ட நகர தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு நாலாம் தெருவில்; தலைவர்: இ. பாலு; பேசுவோர்: எஸ். கஸ்தூரி பி.எஸ்சி., சு. நாராயணசாமி, கு. பாலகிருட்டினன, இரா. தென்னவன், மற்றும் பலர்.

19--8--68

காசிபாளையம்

தி. மு. க. சார்பில் மாலை 7-மணிக்கு தண்ணீர்த் தொட்டித் திடலில்; தலைவர்: கே. கே. காளியண்ணன்; பேசுவோர்: தமிழரசி பி.ஏ., எஸ். எம். பழனியப்பன் எம்.பி.,பி.எஸ்., வி. வி. வெங்கடாசலம் பி.எஸ்சி.பி.எல்., ஜி. பி. வெங்கிடு எம்.சி., பு. கா. ஆறுமுகம், தா. அ. செல்வம், எம். எச். சுல்தான், எம். பி. காளியப்பன், மற்றும் பலர்.

பாலூர்--அகரம்

தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு ஈசுவரன் கோயில் திடலில்; தலைவர்: ஆ. கிருட்டிணமூர்த்தி; பேசுவோர்: ஏ. வி. தண்டபாணி, ஏ. மணி, கே. ஆர். சபாபதி. (மணி–சாமி குழுவினர் கலைநிகழ்ச்சி நடைபெறும்)

அயோத்தியாப்பட்டணம்

தி. மு. க. சார்பில் மாலை 6-30 மணிக்கு இராமர் கோயில் மைதானத்தில்; தலைவர்: எஸ். மாணிக்கம்; பேசுவோர்: வெ. கண்ணன், டி. பொன்னுமலை எம்.எல்.ஏ., சிற்றுளி ஏ. சுப்பிரமணியம், எஸ். ஏ. அன்புக்கரசு, கே. ஏ. பழனி, கே. எஸ். மணி, பி. தண்டபாணி, ஆ. சின்னையன்.

குழுக் கூட்டம்

"18—8—68 காலை 10 மணிக்கு சிவகாசி நகர தி. மு. க. பொது உறுப்பினர் கூட்டம் மகாலிங்கம் திரைப்பட அரங்கில் அவைத் தலைவர் கா. மு. மதார் தலைமையில் நடைபெறும்; அதுபோது, பல பிரச்சினைகள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும்" என செயலாளர் ஏ. துரைக்கண்ணன் அறிவிக்கிறார்.

கலை நிகழ்ச்சி

சூலூர் தி. மு. க. சார்பில் மாலை 7-மணிக்கு பெரியார் மைதானத்தில்—வி. துரைசாமி தலைமையில் சிவகங்கை சேதுராசன் குழுவினர் கலை நிகழ்ச்சி நடைபெறும்.

வட்டக் கழக--வட்டத் தகுதிபடைத்த பெருநகரக் கழகங்களின் தேர்தல்கள்

ஆகஸ்டு 3, 4-ம் நாட்களில் நடைபெற்ற வட்டக் கழக---வட்டத் தகுதிபடைத்த பெருநகரக் கழகத் தேர்தல்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட செயலாளர், மாவட்டப் பிரதிநிதிகள் விவரம் 10--8--68-ம் நாள் 'நம் நாடு' சிறப்பு இதழில் வெளியிடப்பட்டுள்ளதைத் தொடர்ந்து பிரதிநிதிகளின் விவரம் இங்கு தரப்படுகிறது. (தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இவர்கள் அனைவரும் மாவட்டக் கழகத் தேர்தலில் வாக்களிக்கும் உறுப்பினர்களாவார்கள்) :—

தருமபுரி மாவட்டம்

ஓசூர் வட்டம்

செயலாளர்:
பி. ஆர். ஆஞ்சநேயன்

பிரதிநிதிகள்:
பஷீர் அகம்மது, ஓசூர்
சு. சந்திரன், கெலமங்கலம்
கி. இராகு, கெலமங்கலம்
கே. வி. திம்மையா, கெலமங்கலம்
என். ஈ. நடராசன், நம்மாண்டஹள்ளி
என். வெங்கடாசலம், நம்மாண்டஹள்ளி
பாவாஜான், கெலமங்கலம்
கே. இராதாகிருட்டினன், கெலமங்கலம்

தென் ஆற்காடு மாவட்டம்

செஞ்சி வட்டம்

செயலாளர்:
ஆர். ஆர். முனுசாமி எம்.எல்.ஏ., ஈயக்குணம்

பிரதிநிதிகள்:
எஸ். சகாதேவன்
மு. பழனி
ஆர். ஆர். முனுசாமி
சு. இராசாக்கண்ணு
ப. இராமசாமி
கா. ரங்கசாமி, சத்தியமங்கலம்
ஜி. இராமநாதன், பாக்கம்
மு. செல்வராசன், நீர்பெருத்தகரம்
எஸ். கண்ணன், பனப்பாக்கம்
கே. பாண்டுரங்கம் பி.ஏ.பி.எல்., திண்டிவனம்
மா. எதிராசன், சிறுகடம்பூர்